அன்புடன் உலக மக்கள் அனைவரும்
ஆனந்தமாய் வாழவேண்டும்

aanmeegamalar.com
e-magazine
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்





# ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர ஸ்வாமிகள் முதலாம் ஆண்டு குருபூஜை சிறப்பு மலர்

ஆன்மிகமலர்.காம்

aanmeegamalar.com

அன்புடன் உலக மக்கள் அனைவரும்
ஆனந்தமாய் வாழவேண்டும்

ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர ஸ்வாமிகள் முதலாம் ஆண்டு
குருபூஜை விழாவிற்கு வருகை தரும் பக்தர்களை அன்புடன் அழைக்கிறோம்...









தமிழகத்தில் பிரசித்தி பெற்ற கருங்கல் கோவில்கள்
திருப்பணிகள் செய்து விருதுகள் பல பெற்ற ஸ்தபதி



என்றும் சுவாமிஜி மாதாஜி ஆசியுடன்...
சிற்பகலா ரத்னா, சிற்ப செம்மல்
தெளிச்சாத்தநல்லூர் டாக்டர்
ஸ்தபதி A.சண்முகம்,
ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவில்,
61/1, செட்டிய தெரு, மானாமதுரை, சிவகங்கை மாவட்டம்
கோவில் திருப்பணி வேலைகளுக்கு அணுகவும்
9443466481 / 8778732600



aanmeegamalar.com

# பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் நடைபெறும் திருவிளக்கு பூஜையின் மகிமை



மாதந்தோறும் பௌர்ணமி தினத்தில் மாலை வேளையில் கோவில் அம்மா சுவாமி மாதாஜி அவர்களால் நடத்தப்படும் சிறப்பு வாய்ந்தது ஆகும்.திருவிளக்கு பூஜை

உலகில் எண்ணற்றஜீவராசிகள் பிறக்கின்றன. இறக்கின்றன அவற்றுள் மிகத் தொண்மை வாய்ந் ததும், பழமை வாய்ந்ததுமான "தேனீ". தேன்கூடு என்ற ஒன்று உருவாகக் காரணம் அந்த தேனீக்கள். இவைகள் எங்கிருந்துவரு கின்றன என்பது யாருக்கும் தெரியாது. அவை கள் மனதிற்குப் பிடித்த இடங்களில் எல்லாம் கூட்டை கட்டுவது வழக்கமாக கொண்டு வாழ் கின்றது.

அது போல நாம் வாழ்வு ஒளிவீச.. மலர்ந்த வாழ்கையை அனுபவிக்க... ஒவ்வொரு குடும் பத்தினரும் அவரவர் இன்ப, துன்பத்தை மகரந் தமாக கொண்டு வந்து "திருவிளக்கு பூஜை " என்னும் கூட்டு பிரார்த்தனையில் நம் வாழ்நாள் துன்பத்தை துடைக்க ஆதாரமாக உள்ள ஸ்ரீ மகாபஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவியன் அருளைப் பெருவதற்கு ஒரு நல்ல வாய்ப்பாகும்.

பொருள் "அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை" என்றதத்துவத்தின்படி எத்தனை பெரிய பொருள் கள் நம் முன்னோர்கள் சம்பாதித்தாலும் அதை அனுபவிக்கும் பாக்கியம் இருந்தால் தான் அதை நாம் பெறமுடியும்.

"அருள்" அப்படி இல்லை நீ நினைத்த மாத்திரத்தில் அம்மா என்று கூப்பிட்டால் வாரி அளிக்க உற்றதுணையாக நான் இருக்கின் றேனடி மகளே... என்று கூறி உங்களை ஆத ரித்து காத்துக்கொள்வாள் இந்த ஸ்ரீ மகாபஞ் சமுக ப்ரத்யங்கிரா தேவி... ஆயிரம் கண்கள் உடையாள் என்று மரியாதையாக சொல்வதுண்டு ஆனால் "இவளுக்கு கண் என்று சொன்னால் இவளுக்கு பக்தர்கள் எத்தனையோ.. அத்த னையும் கண்கள்".

சப்தமாதர்களில் "மாரி, வாராகி, காளி, இந்தி ராணி, சாமுண்டி, கௌரி" போன்றவர்களில்



இவள் தலைமை வகித்து நிற்பாள். அத்துடன் போதாது என்று தனக்கு பக்கத்துணையாக வாராகி, மாகாளி இருவரை துவார சக்தி களாக அமைத்துக்கொண்டு மேலும் பத்து வித்தியாக்கள், அதாவது தசமஹா வித்தை என்று சொல்லக்கூடிய மாபெரும் சக்தியை அவளுக்கு துணையாளர்களாகவும். 18 சித்தர்களை மூன்றாவது வரிசையில் தமக்கு சக்தி ஊட்டு வதர்க்காகவும் அமைத்துக்கொண்டது தனிச் சிறப்பாகும்.

எங்கும் இல்லாத ஒரு சிறப்பின் ரகசியம் என்னவென்றால் இவள் பார்ப்பதற்கு பெரிய உருவமாக இருந்தாலும் அன்பினால் தாயையும் மிஞ்சிய குழந்தை உள்ளம் படைத்தவள். தாய்க்கு பல குழந்தைகளை காக்கும் பொறுப்பு உண்டு ஆனால் குழந்தைக்கு பசித்தால் தாயை மட்டும்தான் பார்க்கும். அதுபோல் குழந்தை உள்ளம் படைத்த அவள் நம்மேல் எந்தவித களங்கமும் இல்லாமல் என்றும் நம் அனைவரையும் காப்பதில் வல்லவள் என் பது தான் இந்த கோயிலின் முக்கியமான தனிச் சிறப்பு.

ஆயிரம் மக்கள் இருந்தாலும் குழந்தை என்றஉடன் ஆண், பெண் இருவருக்கும் தாய்மை, அதாவது பாசம் வந்துவிடுகின்றது. அதுபோல எல்லோரும் குழந்தை உள்ளம் கொண்ட இந்த பெண்ணரசியை பெருமிதத்துடன் பார்க்க வரு வார்கள் என்பது உலகறிந்த செய்தியாகிறது. இங்கு நடைபெறும் பௌர்ணமி திருவிளக்கு பூஜை வழிபாடு செய்ய ஏராளமான பக்தர்கள் வருவார்கள்.

# சுவாமி ஜி-யின் மகா மந்திரம்



மானாமதுரை ஸ்ரீலஸ்ரீஞான சேகர ஸ்வாமிகள் அருளிய மந்திரம் பக்தர்கள் அனைவரா லும் கவரப்பட்டதாகும்.


பக்தர்கள் தங்கள் குடும்ப விழா பத்திரிகைகள் மற்றும் பெயர் பலகைகளில்,

அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ வேண்டும் என்று ஸ்வாமி கூறியதை மகா மந்திரமாக எடுத்து கொண்டு வழிபாடு செய்து வருகின்றனர்.

ஸ்வாமி அடிக்கடி கூறும் போது உலகில் எல்லா ஜீவ ராசிகளும் அன் புடன் ஆனந்தமாய் வாழ வேண்டும். தர்மம் ஜெயிக்கும் ஆயிரம் கோடி பொன் பொருள் குதிரைகள் தானமாக வழங்கினாலும் அன்னதானம் போல் எந்த தானமும் கிடையாது. உணவு கடைசி பருக்கையை கூட வீணாக கூடாது.

நாம் நம் வாழ்வில் அன்ன தர்மம் செய்து கொண்டே வர வேண்டும். என பக்தர்களிடம் அன்புடன் கூறுவார்.

சுவாமி ஜி யின் வாக்குப்படி தமிழகம் முழு வதும் ப்ரத் யங்கிரா தேவி கோவில் பக் தர்கள் அன்ன தர்மம் சேவையை செய்து வரு கின்றனர்.






ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர ஸ்வாமிகள்
முதலாம் ஆண்டு குருபூஜைக்கு வருகை தரும்
பக்தர்களை வருக! வருக!! என வரவேற்கிறோம்!

ஆன்மிகமலர் ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! .காம் | ஆன்மிகமலர் டிரஸ்ட் சென்னை
நிர்வாகி மற்றும் ஆசிரியர்குழுவினர்

அழகுராஜா முதன்மை செய்தியாளர், ஆன்மிகமலர்.காம்

aanmeegamalar.com

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்

விருப்ப சந்தா செலுத்த ஸ்கேன் செய்யவும்

e-magazine

aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!! மெயில் புக்

படியுங்கள்... aanmeegamalar.com இதுவரை வெளிவந்த 185 e-book கட்டணமின்றி டவுன்லோடு செய்து படிக்கலாம்

## மானாமதுரை ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் நிறுவனர்

# ஸ்ரீ ல ஸ்ரீ ஞானசேகர ஸ்வாமிகள் குருபூஜை விழா

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியேரேந்தல்விலக்கு பகுதியில் பஞ்சபூதேஸ்வரம் உள்ளது. தமிழகத்தில் பிரசித்தி பெற்ற மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக் கோவில் உள்ளது.

இதன் நிறுவனர் ஸ்ரீலஸ்ரீஞானசேகர ஸ்வாமிகள் கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் ஜீவ சமாதி அடைந்தார். கோ வில் வாளாகத்தில் சுவாமி ஜி அதிஷ் டானம் உள்ளது.

இங்கு தினந்தோறும் பூஜைகள் நடைபெற்று வருகிறது. சுவாமி ஜி யின் முதல் ஆண்டு குருபூஜை விழா 14 ந்தேதி நடைபெறுகிறது.

காலையில் விக்னேஸ்வரபூஜை யுடன் தொடங்கி காலை9 மணிக்கு திருவாசக சித்தர் கயிலை புனிதர் சிவ. தாமோதரன்ஜயாவின் திருவா சக விண்ணப்பப் பெருவிழா நடை பெறுகிறது. பகல் 12 மணி அளவில் குருபூஜை, மகேஸ்வர பூஜை அன்ன



தானம் நடைபெறுகிறது. இதற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ மாதாஜிதலைமையில் ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா வேத தர்ம ஷேத்ரா டிரஸ்ட் மற்றும் பக்தர்கள் செய்து வருகின்றனர்.

### ஸ்வாமிகளின் சேவை மற்றும் தொடர் யாகங்கள்

ஸ்ரீமஹாபஞ்சமுகப்ரத்யங்கிராதேவி கோவிலில் அன்புடன் உலக மக்கள் ஆனந்த வாழ வேண்டி கடந்த 27 வருடமாக இங்கு உள்ள தனி யாக சாலை மண்டபத்தில் சண்டி யாகம், சகஸ்ஸர சண்டீயாகம், ஆயுத சண்டி யாகம், அதிருத்ர மஹா யாகம், கடந்த சில ஆண்டுகள் முன்பு கடும் வறட்சியால் பாதிப்படைந்த போது விவசாயம் செழித்து நல்ல மழை வேண்டி வருண ஜெபம், கொரோனா தொற்று குறைய வேண்டி சிறப்பு மகா யாகம் நடைபெற்றது. இந்த யாகங்கள் தமிழகத்தில் இங்கு மட்டும் நடைபெற்றது.

இதேபோல் கொரோனா காலத்தில் சுவாமி ஜி தானே கபசுர மருந்துகளை தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு அலுவலகங்கள் மற்றும் காவல் துறை



யினர்க்கு வழங்கினார்.

கொரனா காலத்தில் திருச்செந்தூர் கோவில் திருப்பணி செய்தார். திருச்செந்தூரில் கந்தசஷ்டி விரதம் இருக்கும் அனைத்து பக்தர்களுக்கு பசும்பால் வழங்கினார்.

சுனாமியின் போது இங்கிருந்து உணவு பொருட்களை கொண்டு சென்று நாகப்பட்டினம் பகுதியில் உட னுக்குடன் உணவு தயார் செய்து அன்ன தர்மம் செய்தார். சென்னை மழை வெள்ளத்தில் மக்கள் இருக்கும் இடத்தில் உணவு வழங்கினார்.

சுவாமி ஜி மூலம் ஏழை பெண் களுக்கு சீர் வரிசையுடன் திருமணம், ஏழை குழந்தைகளுக்கு கல்வி கட்டணம் செலுத்தியும் வந்தார்.

இசையில் புகழ் பெற்ற கலைஞர் களுக்கு பாராட்டி விருதுகள் வழங்கி யுள்ளார்.

தன் வாழ்நாளில் அன்ன தர்மம் செய்யாத நாளே இல்லை என்று சொல்லும் அளவிற்கு நம் வீட்டில் ஒருவர் போல் வாழ்ந்து தற்போது ஜீவசமாதிக்கு தேடிவரும் பக்தர்கள் அனைவருக்கும் கடவுளாக ஆசி வழங்கி வருகிறார் நம் சுவாமி ஜி.






# அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிராதேவி மகத்துவம்

பழமை வாய்ந்த பாரத நாட்டில் தென்பகுதி தென்இந்தியா என்று போற்றப்படுகிறது. இத் திருநாட்டின் தென்திசையை ஆண்ட சிவசக்தி ரூபன் தாள்வழி ஆதியாய் நிற்கின்ற சேவடி போற்றி..!! தென்தமிழ்நாட்டில் குறிப்பிடத் தக்க வகையில் இறையரு ளும் பாச உணர்வும் கிடைக்கிறது என்றால்.. அது மதுரைக்கு அருகில் அமைந்திருக்கும் மானாமதுரையில் தான்.

அப்படிப்பட்ட இந்த மானாமதுரை யில் மிகப் பழமை வாய்ந்த கோயில்கள் இருக்கின்றது.. இருப்பினும் இந்த பழமைவாய்ந்த இந்த புண்ணிய சேத்திரத்தில் இந்த புண்ணிய பூமியில் இப்போது மிகவும் புனிதமாகவும், புதிய தாகவும் ஒரு புதிய சேத்திரம் உருவாகிறது.

அதுதான் நமது "ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி சேத்திரம்". இனி இந்த சேத்திரமானது "பஞ்சபூதேஸ்வரம்" என்று எல்லோராலும் போற்றப்படும் புண்ணிய சேத்தித் திரமாக விளங்கும்.

இச்சேத்திரத்தின் முதன்மையான தத்துவம் என்னவென்றால் ஜாதி, மதம், பேதம். விறுப்பு. வெறுப்பு இல்லாமல் எல்லோரும் சமம் என்பது தான்.. இதுவே தாயின் அருள்மகிமையில் ஒன்றாகும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு" எனும் தத்துவக் கருத்துக்கிணங்க இங்கே மக்கள் எல்லோரும் ஜாதி சமய வேறுபாடின்றி கூட்டு வழிபாடு செய்யும் அழகே இந்த அம்பாளின் ஐந்து முகத்திற்கும் ஒப்பானதாகும்.

அதாவது அச்சம். காமம்,வெகுளி, மடமை, பயிர்ப்பு. இவை அனைத்தையும் விட்டுவிட்டு அம்பாளே லட்சியமாய் இருப்பது தான் இந்த இடத்தின் தனிச்சிறப்பு, இந்த சேத்திரத்தில் வேண்டியது எதுவானாலும் கிடைக்கும். அன்பு, அமைதி.

அரவணைப்பு, வயிற்றுக்கு உணவு, அகத் திற்கு இறை உணர்வு இங்கு ஒருங்கே கிடைக் கிறது.

ஒவ்வொரு யுகத்திற்கும் ஒரு யுகாதி தெய்வம் உண்டு என்பது போல் இந்த யுகத்தில் தோன்ற இருக்கும் ப்ரளய தேவதையாகச் சொன்னால் அது நம் ஸ்ரீ மகாபஞ் சமுக ப்ரத் யங்கிரா தேவி தான்.

ப்ரளயத்தில் இருந்து நம்மை எவ்வழியிலும் நன்மை விலகா வண்ணம் நான்கு திசை போதாது என்று ஐந்தாவதாக இறுதிக்கு ஒரு முகமாய் கொண்டு ஐந்து முகமாக காட்சித் தருகின்றாள். ஐந்து பூதங்களையும் அடக்கி ஆளுகின்றசக்தி இந்த அம்பிகைக்கு உரித்தானது.



இன்றைய சமுதாயத்தில் ஆடம்பர வாழ்கையும், உணவும், உழைப்பு இல்லாமல் ஊதியத்தையும் எதிர்பார்த்து, பெண் என்னும் மாயையில் சிக்கி உழண்ரு கொண் டிருக்கிறார்கள். அந்த மாயத்திரையில் உள்ள பெண் என்னும் பிம்பம் ஒருவனை வாழவைக்கவும், பாவத்தை ஏற்கவும், அவனவன் கர்மாவின் கர்மாக்களுக்கு ஏற்ற வாறு அமைகின்றது.

வினைப்பயனை தர்மம், அதர்மத் திலிருந்து ஆடவர்களை காக்கத்தான் இந்த ஸ்ரீ மகாபஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி என்றபெண் அவதாரம். மக்கள் எல்லொரும் ஒரே இனமாக, ஒரே மொழியாக. ஒரே ஜாதியாக ஒன்று பட்டு ஒற்று மையாக வாழ வழி வகுக்கத்தான் இந்த சக்தி வழிபாடு.

ஆகவே ஸ்ரீ ராமன் இந்த வழியாக சென்றதன் வாயிலாக ஒரு புண்ணிய சேத்திரம் என்று சொல்லக்கூடிய இந்த இடத்தில் சோமநாதரால் சோம பாணம் என்னும் சூரபானத்தை உண்டு மகிழ்ந்து, காட்டை அழித்து கோயில் உரு வாக்கியதன் காரணமாக இந்த இடத்தை வீரமாமதுரை என்று அழைக்கப்பட்டது.

ஆதலால் இந்த இடத்தில் வசிக்கும் மக்கள் மதிமயங்கிய நிலையில் தான் இருப்பார்கள். மது மயக்கத்தை ஒழிக்கவே மதுமதி என்று சொல்லக்கூடிய சொஸ்த்திமதி என்ற ஸ்ரீ மகாபஞ் சமுக ப்ரத்யங்கிரா உறுவாகி இருக்கின்றாள் என்பது சாலச் சிறந்தது.

இங்கு நிறைய வில்வ மரங்கள் இருந்ததால் இந்த இடத்தில் விஷ்ணுமாயா என்று சொல் லக்கூடிய வகையில் மது, மாயா, விகார என்ற தத்துவத்திற்கு இணங்க அமைகின்றது.

இந்த திருக்கோயில்கள் எல்லாம் சக்திமயம் என்று சொல்லி மக்களுக்கு இல்லறத்தில நல்ல வாழ்க் கையை, ஊறுவிளையாத வண்ணம் உற்றத் துணையுடன் தாயாய், சேயாய், அன்பு பாராட்ட இந்த ஸ்ரீ மகாபஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி அவதரித்திருக்கிறாள்.

ஜணன, ஸ்மரண, மரண என்றமூன்று தொழிலையும் ஒரு முகமாக படைக்கும் ஸ்ரீ மகாபஞ் சமுக ப்ரத்யங்கிரா தேவிக்கு எல்லாம் ஒன்று என்பதை நிரூபிக்கும் பொருட்டு, "அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ வேண்டும்" என்பது தான் இந்த ஆலயத்தின் முக்கிய பணி.

சிறுவர் முதல் பெரியவர் வரை எல்லோரும் ஒருமுகமாக இந்த ஆலயத்தில் இன்று பூத்த பூக்களாய், புன்னகை தவழும் முகங்களாய், அவள் பார்க்க வேண்டும் என்பதை உணர்த்தவே அவள் பலவித பூக்களை அன்பு என்னும் கயிற்றால் கட்டி மாலையாக ஏற்று கொள் கிறாள்.

அன்பு பக்குவம் அடையவில்லை என்றால், உலர்ந்த நாரில் எப்படி பூக்களை கட்ட முடியாதோ, அதுபோல நாரினை நீரினில் நனைத்தால் அது பக்குவப்பட்டு பூக்களைக்கட்ட முடிகிறது.

அதுபோல மனமானது பக்குவப்பட்ட பின்னரே அவள் மாலையாக ஏற்றுக்கொள்கிறாள் என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.










## ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் நடைபெறும் விழா விபரம்



சிவகங்கை மாவட்டம் மானா மதுரை பஞ்சமுக ப்ரத் யங்கிரா தேவி கோவிலில் தமிழ் வருடம் சித்திரை மாதம் முதல் பங்குனி மாதம் வரை வழிபாடு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது. சித்திரை முதல் தேதி கோவிலுக்கு வருகை தரும் பக்தர்கள் அனைவருக்கும் கனி காசு வழங்கும் நிகழ்ச்சி, சித் திரை கடைசி ஞாயிறு பால்குடம் எடுத்தல் நிகழ்ச்சி, ஆனியில்

வருஷாபிஷேகம், ஆடியில் சத சண்டீ யாகபெரு விழா ஆடி மூலம் சுவாமி ஜி அவதார திருநாள் நிகழ்ச்சி, ஆவணி விநாயகர் சதுர்த்தி,

புரட்டாசியில் நவராத்திரி விழா மற்றும் குண்டு முத்துமாரி அம்மன் முளை பாரி விழா, ஐப்பசி தீபாவளி தினத்தில் லட்சுமி குபேர பூஜை, கார்த்திகை தீபம் விழா, மார்கழி சிறப்பு வழிபாடு மற்றும் சுவாமி ஜி குருபூஜை தை மாதம் பொங்கல் வழிபாடு, தைப்பூசம் மாசி மகம் பாதயாத்திரை, பங்குனி உத்திரம் சிறப்பு பூஜைகள் வழிபாடுகள் நடைபெறும்.

aanmeegamalar.com

# ஸ்ரீ ல ஸ்ரீ ஞானசேகர ஸ்வாமிகள் ஆசிபெற்ற ஸ்தபதி சண்முகம்









தமிழக கலாச்சாரத்தில் கோவில் களுக்கு முக்கிய பங்குண்டு.சிற்ப கலைகளை பறைசாற்றும்கோவில் கள் அனைத்தும் மன்னர்கள்கட்டிய தாகத்தான் இருக்கும் அக்கோவில் கள் பெரும்பாலும் முழுமை யாக கற்களினால் உருவாக் கப்பட்டதாக இருக்கிறது.

அத்தகைய கோவில் களில் சிற்பிக ளால் தங்கள் முழு திறமையையும் காட்ட முடியும். ஆனால் இந்த காலத்தில் அப்படிபட்ட கோவில்கள் உருவாக்கப்படுவதில்லை.

அந்த அளவுக்கு தற்காலத்தில் கலைஞர்களும் அதிகம் இல்லை. ஆனால் அந்த கற்கோவில் கலைஞர் கள் இன்னும் ஒரிருவர் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களில் ஒருவர் தான் சண்முகம் ஸ்தபதி. சிவ கங்கை மாவட்டம் மானாமதுரையில் வசிக்கும் பரமக்குடி தெளிச்சாத்தநல்லூர் கிரா மத்தை சேர்ந்தவர்.

இவர் கல்லிலேயே கோவில் அமைப்பதில் பிரசித்தி பெற்றவர். இவர் சென்னை வள்ளுவர் கோட்டம், கன்னியா குமாரி விவேகானந்தர் மண்டபம் செய்த ஸ்தபதி எஸ்.கே. ஆச்சாரியாரிடம் 22 வருடம் உதவி சிற்பியாக பணியாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர கர்நாடக மாநிலத்தில் புகழ் பெற்ற பலகோவில் திருப்பணி வேலைகளில் பங்கு பெற்று, அழகிய கோவில்களை கட்டும் பணி யில் ஈடுபட்டு வருகிறார். இவர் தமி ழகத்தில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் கலை அம்சத்தோடு கோவில்களை கட்டி வருகிறார். மானாமதுரை பஞ்சமுக ப்ரத்யங்கிரா கோவில்,குறிச்சி காசி விஸ்வநாதர் கோவில், திருப்பாச்சேத்தி அழகிய நாயகி அம்மன் கோவில் இடைய மேலூர் மாயாண்டி சுவாமி கோவில், மானாமதுரையில் ஆனந்த வல்லி சோமநாதர், அப்பன் பெருமாள் கோவில் உள்பட இது வரை 500க்கும் மேற்பட்ட கோவில் திருபணிகளை முடித்துள்ளார். பத்துஆண்டுகளுக்கு முன்பு மானாமதுரை வேதியரேந்தல் விலக் கில் அமைந்துள்ள ஸ்ரீ மகா பஞ்சமுக பிரித்தியங்கிரா தேவி கோவில் முழுவதுமே கருங்கல்லாலே திருப் பணி வேலையை செய்து சுவாமி ஜி யின் பாராட்டை பெற்றார்.



இந்த கோவில் இவரது சிற்ப கலைக்கு எடுத்துக்காட்டாக உள் ளது. இந்த கோவில் வளாகத்தில் கொடிமர கணபதி சொர்ணாஹா பைரவர், லட்சுமி கணபதி, பலிபீடம் போன்ற முழுவதும் கருங்கல்லால் அமைக்கப்பட்டுள்ளது.

கோவில் திருப்பணிகளை கண்டு அறிந்து சிற்பசாஸ்திரமுறை படி திருப்பணி வேலைகள் செய்கிறார். இது தவிர தற்போது சிவகங்கை, ராமநாதபுரம், மதுரை, புதுக்கோட்டை, தஞ்சாவூர் மாவட்டங் களில் புதிய வடிவில் கோவில் அமைத்து உள்ளார். பல கிராமங்களில் நின்றுபோய் உள்ள குறைபாடுகளை களைந்து திருப்பணிகளையும் செய் துள்ளார்.

ராஜகலைஞன் சிற்ப கலாரத்னா, மில்லியன் கோல்ட் கௌரவ டாக்டர் பட்டமும் பெற்று உள்ளார்.

தெளிச்சாத்தநல்லூர் ஸ்தபதி சண்முகம் கூறும் போது "கோவில் கட்டி திருப்பணி செய்தால் கோடி பலன் கிடைக்கும். புல்லினால் கோவில் அமைத்தால் கோடி பலனும், புதுமண்ணால் அமைத்தால் 100 கோடி பலனும், துல்லிய தூய செங்கலினால் அமைத்தால் தூய 300 கோடி பலனும் கிடைக்கும். ஆனால் கருங்கல்லினால் அமைத்தால் கையில் வைகுண்டம் என்ற அளவுக்கு புண்ணியம் கிடைக் கும்.

அந்த அளவுக்கு கல்லில் அமைக் கப்படும் கோவிலுக்கு சிறப்பு உண்டு. என தெரிவித்தார்.

கலைநயத்தோடு கருங்கல் கோவில் திருபணிவேலைகளை செய்யும் ஸ்தபதி சண்முகத்தை தஞ்சை குருஜி கணபதி சுப்பரமன்யம் சாஸ்திரி, பஞ்ச முகப்ரத்தியங்கிராதேவிகோவில் சுவாமி ஜி,குன்றக்குடி மடாதிபதி பொன்னம்பலம் அடிக ளார், பிள் ளையார் பட்டி கற்பகவிநாயகர் கோவில் ஸ்ரீ சிவபிச்சைகுருக்கள் முன்னாள் மத்திய அமைச்சர் பொன். ராதாகிருஷ்ணன் குறிச்சி வழிவிடு பெரியநாச்சி அம்மன் கோவில் டிரஸ்டி எஸ்பி தேவர் மற்றும் முக்கிய பிரமுகர்கள் பாராட்டி உள்ளனர்.






அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழவேண்டும்

அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக
ப்ரத்யங்கிரா திருக்கோவில் நிறுவனர்
ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர ஸ்வாமிகள்
முதலாம் ஆண்டு குருபூஜை விழாவிற்கு வருகை
தரும் பக்த கோடி பெரு மக்களை
அன்புடன் அழைக்கிறோம்

என்றும் சுவாமியின் ஆசியுடன்

எஸ்.பி.தேவர் குறிச்சி ஸ்ரீவழிவிடு பெரியநாச்சிஅம்மன்கோவில் டிரஸ்டி, சென்னை
தெளிச்சாந்தநல்லூர் ஸ்தபதி Dr.A.சண்முகம்,
ஏ.ஆர்.பி.முருகேசன் B.A., ஸ்தாபகர், ஸ்ரீ செல்வ முருகன் கோவில், மானாமதுரை ஒன்றியம்
D.காமராஜன் SBI ஓய்வு,மானாமதுரை, Kசொர்ணகாளை S காரைக்குடி
க.மோகனசுந்தரம் மாநில நல்லாசிரியர் ஓய்வு, மானாமதுரை. D. பிச்சைமணி சிவகங்கை
R.சதீஸ் மணீஸ் மெக்கல் தேவகோட்டை A.ராமசாமி ஜோதிடக் ககளஞ்சியம் காரைக்குடி.
K.கலியமூர்த்தி தஞ்சாவூர் B.நாகராஜ் குமாரகுறிச்சி (இ) பரமக்குடி
V.கருப்பையா தினமணி நிருபர், ஏஜெண்ட், மானாமதுரை T.தனராஜ் போட்டோகிராபர், மதுரை
S.இராஜேந்திர பிரசாத் தமிழரசி ஸ்ரீ சுந்தர விநாயகர் கோவில் மானாமதுரை
S.ராஜாங்கம் பிள்ளை தலைவர் ஸ்ரீஅழகிய நாயகி அம்மன் திருக்கோவில் திருப்பாச்சேத்தி
J.சேத்தூர் செல்வக்குமார் பத்மநாபா மெடிக்கல், மதுரை
அழகுராஜா ஆன்மிகமலர்.காம். முதன்மை செய்தியாளர்

# தீபாவளி திருநாளில் நடைபெறும் லெட்சுமி குபேர யாகம்

சிவகங்கை மாவட்டம் மானாமதுரை அருகே உள்ள வேதியரேந்தல் விலக்கில் பஞ்சபூதேஸ்வரம் என்னும் இடத்தில் உள்ளது, ஸ்ரீ மகா பஞ் சமுக ப்ரத்யங்கிரா தேவி திருக்கோவில்.

இது முழுவதும் கருங்கல்லால் அமைக் கப்பட்டது. இந்த கோவில் கோபுரம் தமிழகசிற்ப கலைக்கு சிறந்த எடுத்துக்காட்டு ஆகும். இக் கோவில் வளாகத்தில் பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவில் நிறுவனர் தவத்திரு ஞானசேகர் சுவாமிஜி ஜீவசமாதி பீடம் அருகில்உள்ளது. ஏராளமான பக்தர்கள் சுவாமி ஜி பீடத்தில் மனமுருகி வழிபாடு செய்து செல்கின்றனர்.

இந்த கோவிலில் ஒவ்வொரு மாதம் அமாவாசை தினத்தில் உலக மக்கள் நல மாக வாழவேண்டி ப்ரத்யங்கிரா யாகமும், பவுர்ணமி தோறும் திரு விளக்கு பூஜையும் நடைபெறும். கோவிலில் மற்றொரு சிறப்பம்சமான 24 மணி நேரமும் நடை பெறும் அன்னதானத்தில் கலந்து கொள்ள பக்தர்கள் இரவு, பகலாக குவிகின்றனர்.

ஒவ்வொரு தீபாவளி திருநாளை யொட்டி வரும் அமாவாசையில் அன்புடன் உலக மக்கள் ஆனந்தமாக வாழ வேண்டியும் பதினாறு வகையான செல் வங்கள் கிடைக்க வேண்டி ஸ்ரீ லட்சுமி குபேர பூஜை யாகம் வழிபாடு நடைபெறுகிறது.

தினமும் காலை அன்னதானத்தில் வெண் பொங்கல் அல்லது உப்புமா, கேசரி, வடை வழங்கப்படுகிறது. மதியம் 2 வகை காய்கறிகளுடன் சாம்பார், ரசம், மோர் உடன் நடந்து வருகிறது. சித்திரை தமிழ் வருட பிறப்பு, ஆடியில் சத சண்டி யாக பெரு விழாவில் மூன்று வேலையுமே சிறப்பு அன்ன விருந்து நவ ராத்திரி, தீபாவளி பண்டிகை பண்டிகையில் அறு சுவை விருந்தும் தை பொங்கலுக்கு பக்தர்களுக்கு கரும்பும் வழங்கப்பட்டு வருகிறது. பக்தர்கள் பசியோடு இருக்ககூடாது.

என்பதற்காக எப்போதும் அன்னதானம் நடைபெற்று வருகிறது. இதற்காக அன்னதான குழு ஏதும் கிடையாது. பக்தர்களே இங்கு நடைபெறும் அன்ன தானங்களில் பங்கேற்று செல்லும் போது அன்னதானம் சப்ளை செய்யும் சேவையும் செய்கிற காட்சியை இங்கு காணலாம்.

இது பற்றி ஸாக்த மடாலயம் நிறுவனர் தவதிரு ஞானசேகர சுவாமிகள் கூறி உள்ளதாவது தானத்தில் சிறந்தது அன்னதானம் ஆகும். வெளியூர்களில் இருந்து வருபவர்கள் பசியோடு சாமி கும்பிடக் கூடாது. பசியாறி சாமி கும்பிடும் போது வயிறு நிறைந்து மன நிறைவோடும் சாமி கும்பிட்டு செல்வார்கள்.




ஆசிரியர், வெளியீட்டாளர்
N.P.சந்திரன் C.V.நடராஜன்
செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:
அழகுராஜா செல்:
9994323622 / 9994162182

♦♦♦

துணை ஆசிரியர்கள்: ஷியாம்சுந்தர், ஸ்ரீபதி, ஸ்ரீவர்ஷினி, சாய், வேல்.

♦♦♦

வடிவமைப்பு: SML கிராபிக்ஸ் செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.


# மானாமதுரை ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் நடைபெறும் அமாவாசை யாகத்தின் சிறப்பு

மானாமதுரை ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் தை, ஆடி, புரட்டாசி மற்றும் பிரதி மாதம் தோறும் நடைபெறும் அமாவாசை யாகம் பூஜைகள் சிறப்பு வாய்ந்தது.

உலக மக்கள் துன்பத்திலிருந்து விடுபட்டு வாழ்கையில் அணைத்து செல்வகளை பெற்று பேரானந்தத்துடன் வாழ வேண்டி ப்ரத்யங்கிரா யாகம் நடைபெறுகிறது.

அமாவாசையன்று பூமிக்கும், சூரியனுக்கும் இடையில் எவ்வித தடையுமின்றி நேரிடைத் தொடர்பு உண்டு என்பதால் அன்றைய தினம் இந்த யாகத்தை தஞ்சை குருஜி

திரு கணபதிசுப்ரமணிய சாஸ்திரிகள் மற்றும் அவர்கள் சீடர்களால் ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவிக்கு யாகம் நடத்துகின்றார்கள். செய்யப்படுகின்ற இடமோபல யுகமாக தெய்வீக புனீதர்கள் யாகம் செய்த இடம். புனித நீர் கலசங்களை வைத்து நடத்தபடுகிற



ப்ரத்யங்கிர யாகத்தின்போது யாககுண்டத்தில் மனித தோல்அமைப் புடன், ஏழு அடுக்கு தோல்போன்ற விசித்தரா அமைப்புகொண்ட பள்ளங்கல். கட்டங்கள்கொண்டமிளகு பெருமளவில்ஆகுதி செய்யப்படுகிறது. விலை உயர்ந்த பட்டுப்புடைவைகள், மூலிகை பொருட்கள், மிளகு, திரவிய பொருட் கள், பூமாலைகள் பழவகைகள் இடப் படுகிறது.

அதை தொடர்ந்து வனதுர்கை யாகம் நடைப்பெறுகிறது பின்னர் பூர்ணாஹுதி மற்றும் தீபாரதனை நடைபெறுகிறது தொடர்ந்து யாக சாலையிலிருந்து புனிதநீர் கலசத்தை மேலதாளத்துடன் எடுத்துச் செல்ல பட்டு ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவிக்கு புனித நீர்ஊற்றி அபிஷேகம் நடைபெறும். அன்று அம்பாளுக்கு தங்க கவசம் அலங்காரம் செய்யப்பட்டு இருக்கும் தீபாரதனை நடைபெறும்

இங்கு கணபதி. லக்ஷ்மி கணபதி யாக தம்பதி சமேதராக இருந்து அருள் பாலிக்கிறார் மற்றும் வைரவர் இங்கு ஸ்ரீசொர்ணாகர்ஷண பைரவர்ராக இருந்துஅருள் பாலிக்கிறார். அமாவசை மற்றும் பௌர்ணமி நாட்களில் தங்ககவசம் அலங்காரம் செய்யப்பட்டு இருக்கும்

யாக புகை நம்மீது படுவதாலும், ஜுவாலையை நாம் பார்ப்பதாலும் தெய்வீக உருமாற்றம், சாந்த நிலையிலேயே நடந்துவிடுகிறது அமாவசை யாகத்தின் மூலமாக தனிமனிதன் பிரச்சனைகள், புரியாத வியாதிகள் போன்றவைகளுக்கு தீர்வு அமைவதோடு ஏவல், பில்லி, சூனியம் போன்ற தீய சக்திகள் செயலற்றுப் போகிறது என்பது பல ஆண்டுகால அனுபவ உண்மை. இந்த மண்ணை மிதித்து புனித சேஷ்திரமகிமை இந்த அம்பாளை தரிசித்து அன்னதானம் சாப்பிட்டாலே சூர்யனை கண்ட பனிபோல் நம் குறைகள் பினிகள் அனைத்தும் பறந்து விடுகின்றன அப்படிபட்ட புனித சேஷ்திரம் இது.

அனைவரும் இந்த அமாவாசை யாகத்தில் கலந்து கொண்டு ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிர தேவி திருவருள்ஆசிர்வாதம் பெற்று ஆனந்த்தமாய் வாழ வேண்டும் என்று மானாமதுரை ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவிவேத தர்ம ஷேத்ர டிரஸ்ட் ஸ்ரீ மானாமதுரை சுவாமிகள் ஸ்ரீ அம்மா சுவாமிகள் அன்புடன் அழைக்கின்றார்கள்.

மேலும் தகவல்கள்களுக்கு
**ஸ்ரீ மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவிவேத தர்ம ஷேத்ர டிரஸ்ட்,**
பஞ்சபூதேஸ்வரம், வேதியரேந்தல் விலக்கு, மானாமதுரை
சிவகங்கை மாவட்டம்
cell : +91 98428 58236

# கோபூஜை கஜ பூஜை நடைபெற்ற மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா கோவில்

மானாமதுரை மஹா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் நடைபெறும் சண்டி யாக பெருவிழாவில் எப்போதும் கோபூஜை மற்றும் யானைக்கு நடத்தப்படும் கஜ பூஜை வழிபாடு இங்கு நடைபெறும்.

ஸ்ரீ ல ஸ்ரீ ஞான சேகர ஸ்வாமிகள் நேரடியாக கோபூஜை மற்றும் கஜ பூஜை நடத்தி பசுக்களுக்கும், யானைக்கு தேவையான உணவுகளை சுவாஜி வழங்குவார். ஐந்து நாட்கள் யாக விழாவில் கஜ பூஜை நடத்துவார். இப் பகுதியில் இங்கு மட்டுமே கஜ பூஜை வழிபாடு நடைபெற்று உள்ளது. இதே சுவாமி ஜி திருச்செந்தூர் கோவில் யானை மீது

மிகுந்த அன்பு வைத்து உணவு வழங்குவார். அதேபோல் கோவில் வளாகத்தில் குழந்தைகள் வந்து விட்டால் குழந்தைகளை கைகளில் தூக்கி

மகிழ்ச்சி அடைந்து குழந்தைகளுக்கு ஆப்பிள் மற்றும் பிஸ்கட் வழங்குவார்.

கோவிலுக்கு வரும் குழந்தைகள் சுவாமி ஜி யிடம் எளிதில் சென்றுவிடும் . குழந்தைகளுக்கு தமிழில் கடவுள் பெயரை வைக்க வேண்டும். அதிக பக்த்தர்களுக்கு குழந்தைகளுக்கு

முருகன் பெயரை சூட்டுங்கள் என உபதேசம் செய்து உள்ளார். இதேபோல் சுவாமி ஜி பழனி பாதயாத்திரை, மாசி மகம் அன்று மதுரை மீனாட்சி அம்மன் கோவிலில் இருந்து பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலுக்கு பாத யாத்திரையாக பக்தர்களை அழைத்து வருவார்.

வாரத்தில் ஒரு முறையாவது திருச்செந்தூர் முருகனை தரிசனம் செய்து விடுவார். இது தவிர அன்ன தர்மம் ஏற்பாடு செய்த கோவில்களும் நேரில் சென்று அன்ன தானம் பணிகளை செய்வார். சுவாமி ஜி நடத்திய அன்னதானங்களில்

அதிக வகை உணவுகளுடன் தலை வாழை போட்டுதான் அன்னதர்மங்களை செய்து உள்ளார். போக முடியாத ஊர்களில் சுவாமி ஜி ஏற்பாடு செய்த அன்ன தான விருந்தில் உள்ள உணவில் ஏதேனும் உப்பு குறைவாக இருந்தால் கூட இங்கிருந்தே



அறிந்து சமையல் காரர்களிடம் தெரிவிப்பார். சுவாமி பக்தர்கள் அனைவரிடமும் அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ வேண்டும் உங்கள் வீட்டு அருகில் உள்ள விநாயகர் கோவிலில் தீபம் ஏற்றி வழிபாடு செய்யுங்கள் நல்லேதே நடக்கும் என்று கூறுவார்.


தன்னிடம் ஆசி பெற வரும் பக்தர்களிடம் முன்னோர்களை மறக்காமல் திதி தர்பணம் செய்ய வேண்டும் அல்லது பசுவிற்கு கீரை வழங்கி வழிபாடு செய்ய வேண்டும் என வலியுறுத்துவார். பக்தர்கள் பலரும் கோவிலில் நடைபெறும் அன்ன தர்மத்திற்க்கு தங்களால் முடிந்த வரை அரிசி மற்றும் மளிகை பொருட்கள் வழங்கி வருகின்றனர். சுவாமி ஜி யின் அன்ன தர்மம் ஜெயிக்க நாமும்

சுவாமி ஜி ஏற்படுத்திய அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்யங்கிரா தேவி கோவிலில் நிதியாகவோ பொருளாகவோ வழங்க வேண்டும்.





உங்கள் பகுதி
கோவில் கும்பாபிஷேகம்,
விழாக்கள், போன்றவற்றை
இதுபோன்ற
சிறப்பு மலராக
வெளியிட தொடர்பு
கொள்ளவும்
தரமாகவும்,
சிறப்பாகவும்
செய்து தருகிறோம்...!
அழகுராஜா
முதன்மை செய்தியாளர்
செல்: 9994323622
9444228203



ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர ஸ்வாமிகள்



அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்தியங்கரா


அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழவேண்டும்



அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்தியங்கரா
திருக்கோவில் நிறுவனர் ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர ஸ்வாமிகள்
முதலாம் ஆண்டு குருபூஜை விழாவிற்கு வருகை தரும்
பக்த கோடி பெரு மக்களை அன்புடன் அழைக்கிறோம்.

அன்பு அம்மா அப்பா அருள் ஆசி

குருவே சரணம்
என்றும் சுவாமிஜி மாதாஜி ஆசியுடன்
ராமகிருஷ்ணன்
வெங்கடாசலம் மெட்டல்
லெட்சுமிபுரம் 2வது தெரு, மதுரை.

செந்தில் மெட்டல்
செல்லூர் மதுரை



அருள்மிகு ஸ்ரீ மகா பஞ்சமுக ப்ரத்தியங்கரா திருக்கோவில் நிறுவனர்
ஸ்ரீலஸ்ரீ ஞானசேகர ஸ்வாமிகள் முதலாம் ஆண்டு குருபூஜை
விழாவிற்கு வருகை தரும் பக்த கோடி பெரு மக்களை
அன்புடன் அழைக்கிறோம்.






அன்புடன் உலக மக்கள் அனைவரும் ஆனந்தமாய் வாழ வேண்டும்

S.ஆனந்தகிருஷ்ணன்&கோ

மரம், ஓடு வியாபாரம் சாமில்

எங்களிடம் ஒரிஜனல் (மர்மா), ஆஸ்திரிரேலியா வேங்கை,
பர்மா தேக்கு, கேரளா தேக்கு, வெளிநாட்டு மரங்கள், வேம்பு, மருதமரம்,
நாவல்மரம், நல்ல கலர் உள்ள நாட்டு வாகை மரங்கள், குமிழ்மரம்,
ரோடு வாகைமரம், பெரிய சுற்றளவு கலர் உள்ள மரங்கள் மற்றும்
மர பர்னிச்சர்கள் விற்பனைக்கு தயாராக உள்ளது.
மொத்த மர வியாபாரிகள் அணுகவும்.

சீனியப்பா குரூப்ஸ்



SAK மானாமதுரையில் அதி நவீன வசதிகளுடன்
சீனியப்பா லாட்ஜ் A/C
SAK திருமண ஹால்

S.ஆனந்தகிருஷ்ணன்
செல்: 98424 68256



A.குணா (எ) குணசீலன்
செல்: 98428 68256





